Registered as a Newspaper in Ceylon

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National Tamil Daily தேசிய தினசரி தபால் பெட்டி 49

மார்கழி 25 ம் நாள் றம்ழான் பிறை 4 (8 65) வெள்ளிக்கிழமை இலக்கம் 330




# கட்சிகள் சுறுசுறுப்பு

## வடபகுதி அபேட்சகர் நியமனப் பத்திரங்கள்

### கச்சேரியிலும் நகர மண்டபத்திலும் ஏற்கப்படும்

நல்லூர், வெள்ளி

வடபகுதியிலுள்ள தேர்தல் தொகுதிகளில் போட்டியிடும் அபேட்சகர்களின் நியமனப் பத்திரங்கள் வருகிற திங்கட்கிழமை நண்பகல் தேர்தல் அதிகாரிகளினால் ஏற்றுக் கொள்ளப்படவிருக்கின்றன.

யாழ்ப்பாணம் கச்சேரியிலும், யாழ். நகர மண்டபத்திலும் திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கும் ஒரு மணிக்கும் இடையே நியமனப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படவிருக்கின்றன.

யாழ்ப்பாணம் கச்சேரியில் ஊர்காவற்றுறை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, உடுவில், யாழ்ப்பாணம், தொகுதிகளுக்கான நியமனப்பத்திரங்களும் யாழ்நகர மண்டபத்தில் நல்லூர், கோப்பாய், உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கிளிநொச்சி ஆகிய தொகுதிகளுக்கான நியமனபத்திரங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்.

இந்தப் பதினொரு தேர்தல் தொகுதிகளுக்கும் உதவித் தேர்தல் அத்தாட்சி உத்தியோகஸ்தர்களாக யாழ்ப்பாணம் கச்சேரி மாவட்ட காணி உத்தியோகத்தர் திரு. எம். பஞ்சலிங்கம் யாழ். மாவட்டக் கச்சேரி காணி உத்தியோகத்தர் திரு ஆர். சி. தர்மரத்தினமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா அபேட்சகர் நியமனப்பத்திரங்கள் வவுனியாக் கச்சேரியிலும் மன்னார்த் தொகுதி அபேட்சகர் நியமனப்பத்திரங்கள் மன்னார் கச்சேரியிலும் ஏற்றுக்கொள்ளப்படும்.

## தமிழ்ப்பகுதிகளில் ஐ.தே. கட்சி தீவிர போட்டி

### அபேட்சா பத்திரங்கள் திங்களன்று தாக்கல்

யாழ்ப்பாணம், வெள்ளி

தேர்தலில் போட்டியிடும் அபேட்சகர்கள் தமது நியமனப்பத்திரங்களை இம் மாதம் 11-ம் திகதி திங்கட்கிழமை தாக்கல் செய்ய வேண்டும். அபேட்சகர் நியமனதினம் நெருங்க நெருங்க அரசியல் கட்சிகளும் சுறுசுறுப்புடன் செயலாற்றுகின்றன. தமிழ்ப் பகுதிகளில் குறிப்பாக கிழக்குமாகாணத்தில் ஐக்கிய தேசீய கட்சி சார்பில் பலர் போட்டியிடுகிறார்கள்.

சில அரசியல் கட்சிகளுடன் நீண்டகாலமாகத் தொடர்பு கொண்டிருந்தவர்களும்கூட தம்மையும் ஒரு தொகுதியில் கட்சி அபேட்சகராக நிறுத்த முன்வரவில்லையென்பது தெரிந்ததும் கட்சியைவிட்டு வெளியேறி சுயேச்சையாகப் போட்டியிடு தற்கு முன்வந்துள்ளனர். வேறு சிலர் கட்சியிலிருந்து விலகி அதற்கு எதிரான அபேட்சகர்களை ஆதரிக்க முன்வந்துள்ளனர்.

பல இடங்களில் அரசியல் கட்சிகளிடம் தங்களை அபேட்சகர்களாக நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தவர்கள் கட்சிகள் அதற்கு மறுப்புக் தெரிவித்ததும் அதற்குமாறான கொள்கையுடைய கட்சிகளிடமும் அனுமதி கேட்டனர். இதற்கும் வாய்ப்பில்லாமல் போகவே சுயேச்சையாகப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளனர். இப்பொழுது ஒவ்வொரு தொகுதிகளிலும் பல அபேட்சகர்கள் போட்டியிடப்போவதாகத் தெரிவித்து உள்ளபோதிலும் எத்தனை பேர் உண்மையில் போட்டியிடுவார்கள் என்பது திங்கட்கிழமைதான் தெளிவாகும்.

## சுதந்திரக்கட்சி அபேட்சகர்கள்

கொழும்பு, வியாழன்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிடுவதற்கான அத்தாட்சிக் கடிதங்களை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இன்று தமது கட்சி அபேட்சகர்களுக்கு வழங்கினார். ஹொரகொல்லையில் இந்தக் கடிதங்கள் கொடுக்கப்பட்டன. தொகுதியும், அபேட்சகர் பெயர் விபரமும் வருமாறு:

மதவாச்சி - மைத்திரிபால சேனநாயக்கா, ஹேவாகெற்ற - ரி. பி. இலங்கரதன, கபாதுவ - டி. எஸ். குணசேகரா, மிறுவாங்கொட - எம். பி. டி. இஸட் சிறிவர்த்தன, கேகாலை - கலுகல்லை, காவலப்பிட்டி - ஆர். எஸ். பெல்பொல, தொம்பே - பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, வலப்பனை - ரி. பி எம். ஹேரத், தம்புல்ல - ரி. பி தென்னக்கோன், மத்துகம - தயா பஸ்கோல், ஹ புதளை - டபிள்யூ பி. யி ஆரியதாஸ, களனி - ஆர். எஸ். பெரேரா, மாவனல்லை - பி ரத்னயக்கா, பலாங்கொடை - வி. எஸ். ரத்வத்தை, கொஸ்வ - டி. எஸ், சமரசிங்க, குளியாப்பிட்டியா - ஜி டபிள்யு. சமரசிங்கி, கொழும்பு மத்திய பகுதி - ஹலீம் இஸாக், கொழும்பு - எம் பி. த் றோ, திவுலப்பிட்டி - லக்ஷ்மன் ஜெயகொடி, கம்பஹா - எஸ், டி. பண்டாரநாயக்க, ஜா எலை - ஒலிவர் ஜெயசூரியா, மகர - எஸ். கே. சூரிய ராய்ச்சி, கோட்டை - ஸ்டான்லி திலகரத்ன, கெஸ்பவ - சோமவீர சந்திரசிறீ, அவிசாவளை - திருமதி சோமா விக்கிரமநாயக்க, கொறனை - ரத்னசிறீ விக்கிரமநாயக்க, பண்டாரகம - டி. டி. பெரேரா, பேருவளை - ஐ. ஏ. சி காதர், லக்லா - எம். கே. பண்டா, மாத்தளை - டபிள்யூ பி டொறக்கும்புற, ரதகேடடை - எஸ். வை. யலகம, வத்தேகம - ஏ. ஈ. பெ

(6ம் பக்கம் பார்க்க)

'ஈழநாடு' சூறாவளி நிதி

## வல்வை நெசவு ஆலை ரூ. 1,500 பெறுமதி துணி அன்பளிப்பு

சூறாவளியினால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களுக்கு உதவிகள் அளிக்கும்பொருட்டு, வல்வை நூற்றல், நெய்தல் ஆலை ஸ்தாபனத்தார் 1,500 ரூபாய் பெறுமதியான துணிவகைகளை "ஈழநாடு" சூறாவளி கஷ்டநிவாரண நிதிக்கு அன்பளிப்பு செய்துள்ளனர்.

"ஈழநாடு" சூறாவளி கஷ்டநிவாரண நிதிக்கு அன்பர்கள் தொடர்ந்து நிதிஉதவியளித்து வருகின்றனர். யாழ்ப்பாணம் டேவிட் வீதியிலுள்ள பற்றிக்ஸ் சலூனைச் சேர்ந்த வ. வ. மரியதாஸ் என்ற அன்பர் 28 ரூபாய் சேகரித்து அனுப்பியுள்ளார்.

சூறாவளியினால் பாதிக்கப்பட்டுத் துன்பமுறும் மக்களுக்கு உதவ செய்ய விரும்பும் அன்பர்கள் தமது அன்பளிப்பை

"புயல் கஷ்டநிவாரண நிதி"

"ஈழநாடு", த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்

என்ற விலாசத்துக்கு அனுப்பிவைக்கவும். வசூல் விவரங்கள் அவ்வப்போது 'ஈழநாடு'பத்திரிகையில் வெளியிடப்படும்.

| | |
|---|---|
| கே பாஞ்சோதி யாழ்ப்பாணம், | 2 |
| மானிப்பாய் இரத்தினவாசா காலஞ் சென்ற திரு. ரி. நவரத்தினம் நினைவாக | 10 |
| காவற்குழி சரஸ்வதி நூல்நிலைய நிர்வாகி த். இரத்தினம் | 2-50 |
| தலைமை ஆசிரியர் சைவநெறிக் கழகம் கரவெட்டி | 10 |
| வைத்தியர் மு. சுப்பிரமணியம் வடலியடைப்பு | 5 |
| அ. வ. மரியதாஸ பற்றிக்ஸ சலூன் டேவிட் வீதி யாழ்ப்பாணம் | 1 |
| ஆ. க. தேவசகாயம் 55 டேவிட் வீதி | 5 |
| ஏ. தம்பு, குருச்சா ரோ- | 1 |
| சி. துரைசிங்கம் ஆனைக்கோட்டை | 2 |
| ஏ பாலசுப்பிரமணியம் இராஜேந்திரா ரோட் | 3 |
| செல்வநாயகம் கட்டப்பிராய் | 1 |
| மோ திசவீரசிங்கம் குருநகர் | 1 |
| க அப்பிநாயகம் 54, பீச்ரோட், குருநகர் | 1 |
| டியூக் பேக்கரி, பீச்ரோட் | 2 |
| கமலா, ஸ்ரோர் 123, பாங்க்சால் வீதி | 10 |
| பொ நவரத்தினம் டேவிட் வீதி | 1 |
| ஓர் அன்பர், "ஈழநாடு" | 51 |
| எம் கனகசபை, மனேஜிங் டைரக்டர் யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம் | 100 |

## ஐக்கிய தேசியக்கட்சி 111 தொகுதிகளில் போட்டியிடும்

கொள்ளுப்பிட்டி, வியாழன்

ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் போட்டியிடுபவர்களின் பெயர் விபரங்கள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சில தொகுதிகள் விபரங்கள் வருமாறு:—

திருக்கோணமலை—வி. ஆர். நவரத்தினராசா, மூதூர்—கே. டபிள்யு. தெய்வநாயகம், கல்குடா—ஏ. எச். மாக்கான் மரிக்கார், அம்பாறை—கே.சி. சுதசிங்கா, பட்டிருப்பு—வி. சின்னத்துரை, கல்முனை—காதர் முகைதீன், நிந்தாவூர்—எம் எம் முஸ்தாபா, பொத்துவில்—சுலைமான் லெப்பை, டெடிகம—டட்லி சேனநாயக்கா, கேகாலை—நிமால் கருணத்திலகா, புத்தளம்—எம். எச். எம். நயினுமரக்கார், சிலாபம்—எஸ். சி. சேர்வி கொரியா வெனப்புவா—பெஸ்டஸ் பெரரா. கொழும்பு வடக்கு—வி. ஏ. சுகததாசா, கொழும்பு மத்தியபகுதி—ஆர். பிரேமதாசா, எம். பலீல் கபூர் பொறளை—எம். எச். எம். முகமட், கொழும்பு வடக்கு—ஜே. ஆர். ஜெயவர்த்தன.

பெண்கள்

பாணந்துறை—லேடி சுகந்தா டி. பொன்சேகா, கலிகமுவா—திருமதி விமலா கன்னங்கரா, வெல்மதுரா—திருமதி சீதா செனிவரத்தின

ஐக்கியதேசியக்கட்சி, எதிர்வரும் பொதுத்தேர்தலில் 111 தொகுதிகளில் போட்டியிடும். கொழும்பு மத்திய தொகுதியில் ஐக்கியதேசியக்கட்சி சார்பாக இருவர் போட்டியிடுவார்கள்.

## தபால்மூலம் வாக்களிப்போர்

### 18-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும்

கொழும்பு, வியாழன்

தபால் மூலம் வாக்களிக்க விரும்புவோர் இம்மாதம் 18-ம் திகதிக்கு முன்னர் தங்கள் விண்ணப்பப்பத்திரங்களை பதிவுக் காரியஸதர்களுக்கு அனுப்பிவைக்கவேண்டும். முப்படைகளைச் சேர்ந்தவர்களும், புகையிரத, தந்தி தபால் இலாகாக்களைச் சேர்ந்தவர்களும், இ. போ. ச. உத்தியோகஸதர்களும், தேர்தல தினத்தில் கடமை காரணமாகவோ அல்லது சுகயீனம் காரணமாகவோ வாக்களிக்க வசதியில்லாத அரசாங்க, ஸ்தலஸ்தாபன ஊழியர்களும் தபால் மூலம் வாக்களிக்கலாம்.

## எவ்வாறு பயன்படுத்துவது?

கொழும்பு, வியாழன்

புயல் நிவாரண நிதிக்குச் சேர்ந்துள்ள பணத்தை எவ்விதம் பயன்படுத்துவது என்பது குறித்து தொண்டர் ஸ்தாபனங்களுடன் சமூக சேவை இலாகா டைரக்டர் கலந்தாலோசித்துவருகிறார். புயல் நிவாரண உதவிகளை தகுந்த முறையில் எவ்வாறு பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கலாம் என்பது குறித்து இந்தக் கூட்டத்தில் ஆராயப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

வாலிபப் பருவத்தில் படிக்கும்போதே ஆத்ம ஞானவித்தை ஊன்றிவிட வேண்டும். ஏனெனில் பின்னுல் வாழ்க்கைப் போராட்டத்திலே ஒரு நிமிஷம் கூட தியானம் பண்ண வசதியில்லாமல் போய்விடும். ஆத்மஞான வயதான பிறகு தேடிக்கொள்ளலாமென்ருல் அது பெருந் தவருகும்.

— சுவாமிசிவானந்தர்

ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily. Post Box: 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு மார்கழி மீ 25 உ (8-1-65)

## சமூக நன்மையும் கட்சி நன்மையும்

ஈழத்திலே தமிழ்ப்பேசும் மக்கள் மொழி, மற்றும் உயிர் போன்றபல உரிமைகளை இழந்து சென்ற பல்லாண்டுகளாக அவதிப்பட்டு வருகின்ருர்கள். இழந்த உரிமைகளை எப்படி மீண்டும் பெறுவதென்பதே இங்கு தமிழ்ச் சமூகத்தின் பொதுவான முக்கிய நோக்கமாகும்.

இதை எப்படிப் பெறுவது? இக்கேள்விதான் தமிழ்ச் சமூகத்திலே ஒவ்வோர் மனதிலும் எழுந்துள்ள முக்கிய விஷயம். வேறு விஷயங்களில் கருத்து வேற்றுமைகள் என்ன இருப்பினும் இழந்த உரிமைகளைப் பெற வேண்டிய இந்த நோக்கத்தில் இங்கு தமிழ்ப்பேசும் மக்களிடையோ, கட்சிகளிடையோ வேற்றுமையில்லை. பல கட்சிகளாகப் பிரிந்திருப்பினும், அவசியமான சமயங்களில் அவர்கள் இதுபற்றி ஒத்துழைத்தே வந்திருப்பதும் கண்கூடு.

ஆனுல் தமிழ்ச் சமூகத்துக்குச் சோதனைகள் பல ஏற்பட்டுள்ள இச்சமயத்திலேயும், அதன் முக்கிய தலைவர்களுக்குள் ஒற்றுமையில்லாமல் இருப்பது சமூகத்துக்கே பலவீனமென்றும், தலைவர்கள் தங்களுக்குள்ளாக சமூகத்தின் மேலான நன்மையைக் கருதி, விட்டுக்கொடுத்து ஒற்றுமைப்பட்டால் அந்த ஒற்றுமையே, புதிய பெரிய சக்தியாகத் தோன்றி, இழந்த உரிமைகளைப் பெற பேருதவியாக இருக்குமென்பது தமிழ்ச் சமூகத்திலே கட்சி மனப்பான்மையற்ற பல அரசியல் அறிஞர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்ருர்கள். இவ்வித ஒற்றுமைக்கான முயற்சிகள் செய்யப்பட்டதாகவும், ஆனுல் அது கைகூடாமல் போய்விட்டதாகவும் தெரியவருகிறது. இது மிகவும் துரதிருஷ்டவசமாகும்.

கட்சிகளின் நலனைவிட சமூகத்தின் நலன் மிக முக்கியமாகும். சமூக நலனைக்கருதி, கட்சிகளும், தனிப்பட்டவர்களும் சில சமயம் தியாகம் செய்ய வேண்டியதே. பொதுத் தேர்தல் வந்துள்ள இச்சமயம் அவற்றில் ஒன்ருகும். ஏற்கெனவே பல சோதனைகளுக்கும் உட்பட்டுள்ள தமிழ்ச் சமூகம், ஒற்றுமையின்றி, தேர்தல் காலத்தில், அதன் பல தலைவர்களும் தங்களுக்குள் தற்கொலைப் போட்டியிட்டுக்கொள்வதாயின், சமூகம் மிகவும் பலவீனமாவதுடன், மற்றவர்கள் என்ன கருதுவர்?

தமிழ்த் தலைவர்கள் தங்களுக்குள் விட்டுக்கொடுத்து, இச்சமயம் ஒற்றுமைப்பட வேண்டுமென்பதே தமிழ் பேசும் பொதுமக்களின் பொதுவான கருத்தாகும். இவ்வித புதிய ஒற்றுமை ஏற்படின், இச்சமூகத்தின் மதிப்பும் திடீரென உயர்ந்து, இழந்த உரிமைகளையும் பெறுவதற்கு அது மிக உதவியாகவுமிருக்கும். பல தமிழ்த் தொகுதிகளுக்கும் ஏற்கெனவே பல கட்சிகளும் அபேட்சகர்களை அநேகமாக நியமித்துவிட்ட இச்சமயத்தில் இதைப்பற்றி புனராலோசனை செய்து, விட்டுக்கொடுப்பதென்பது மிகவும் கசப்பான சங்கடமான விஷயம்தான். என்ருலும் சமூகத்தின் மேலான நன்மையைக் கருதுகையில், எவ்வளவு தியாகமும் பெரிதாகாது.

## உண்மையான சேவை

பலாங்கொடை, வியா.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மட்டும்தான் முஸ்லிம் மக்களுக்கு உண்மையான சேவை செய்துள்ளதென்று பலாங்கொடை முன்னுள் எம். பி. திரு. சி. எஸ். ரத்வத்தை இங்கு நடைபெற்ற கூட்டத்தில் பேசும் போது கூறிஞர்.

சில முஸ்லிம் தலைவர்களின் நடவடிக்கைகளால், பலாங்கொடை பகுதியிலுள்ள முஸ்லிம் மக்கள் மிகவும் கஷ்டப்படுவதையிட்டு மிகவும் வருந்துகிறேன்" என்று அவர் மேலும் பேசும்போது கூறிஞர்.

## 'எந்த கொள்கையை பின்பற்றுகிரூர்?'

கொழும்பு, வியா.

"திரு. சி. பி. டி. சில்வா அரசாங்க கட்சியிலிருந்து வெளியேறியது பண்டாரநாயக்காவின் கொள்கையை பின்பற்றுவதற்காகவா அல்லது முதலாளித்துவ கொள்கையை பின்பற்றுவதற்காகவா என்று நான் அவரை கேட்டுக் கொள்கிறேன்" என்று கம்பளையில் நடைபெற்ற கூட்டத்தில் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா பேசும் போது கூறிஞர்.

பிரதமர் தொடர்ந்து கூறியதாவது:

"சி. பி. டி.' சில்வாவிற்கு எதிராக யு. என். பியும், யூ. என். பிக்கு எதிராக சி. பி. டி.' யும் போட்டியிடமாட்டார்கள் என்பதிலிருந்தே அவரது நோக்கத்தை அறிந்து கொள்ள முடியும். காலஞ்சென்ற எனது கணவர் பண்டாரநாயக்கா திரு சி. பி. டி.' சில்வா முன்னிலையில் எதிர் காலத்தில் யூ. என். பியினருக்கு நாட்டில் இடம் கொடுக்க கூடாதெனக் கூறிஞர் ஆனுல் தற்பொழுது சி. பி. டி.' சில்வா, யூ. என். பியை பின்பற்றி வருகிரூர்.

## குறுகிய காலத்தில் அதிக சேவை

மத்துகம, வியாழன்

கூட்டு அரசாங்கம் மிகவும் குறுகிய காலத்தில் மக்களுக்கு அதிகம் சேவைசெய்துள்ளது என்று தோட்டதொழிலாளர் யூனியன் களுத்துறை மாவட்டத் தலைவர் திரு எம். நவசிவாயம் இங்கு நடைபெற்ற கூட்டத்தில பேசும்போது கூறிஞர்.

புயலுக்குப்பின் மன்னூர்.....

# புனருத்தாரணம் செய்ய எவ்வளவு காலமாகுமோ

— நமது அலுவலக நிருபர் —

## 4

தலைமன்னூர் 'பியர்' புகையிரத நிலயத்திலிருந்து மன்னூர் செல்லும் வீதி, நீண்ட நேர் வீதி வீதியின் இருமருங்கிலும் உள்ள பனந்தோப்புகளும், தென்னந்தோப்புகளும் கண்கவர் காட்சியை அளித்திருக்கும். ஆனுல் சூருவளியின் பின்னர், பனந்தோப்புகள் எல்லாம் ஒரே ஓலைக்காடாகக் காட்சியளிக்கின்றன. விழுந்து கிடக்கும் பனைகளையும், அவற்றின் ஓலைகள் காய்ந்து சருகாகி தரையை மூடிமறைத்துவிட்டன. தென்னை மரங்கள் சரிந்தும், விழுந்தும் கிடக்கும் கோரக்காட்சியை மீண்டும் வர்ணிப்பது உகந்ததல்ல எனறே எண்ணுகிறேம். இவற்றைவிட விழுந்து கிடக்கும், உடை, வேப்பமரங்களின் காட்சியும் சொல்ல முடியாததாகும் வீதியோரங்களில் விழுந்த மரங்கள் குவிக்கப்பட்டுள்ளதால் வாகனங்கள் ஒன்றையொன்று விலத்துவது பெரும் கஷ்டமாகவுள்ளது. ஒரு சிறு மரக்கன்றை வைத்து அதை வளர்ப்பதற்கு மனிதன் எவ்வளவு பாடுபடுகிறுன். செல்வம்தரும் இத்தனை மரங்களையும் சூருவளி உயிர் வாங்கிவிட்டது; இதை எவ்விதம் இனி ஈடு செய்வது? கருங்கக் கூறின் கண்ணுல் காணமுடியாத காட்சியை வழிநெடுகும் கண்டுகொண்டு மன்னூர் வந்தடைந்தோம்.

ஃ ஃ ஃ

சூருவளியினுலும், கடல் கொந்தளிப்பினுலும் மன்னூர் மாவட்டம் பாதிக்கப்பட்டதும் சுகாதார இலாகாவினர் உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டனராம். மாவட்டத்திலுள்ள சுகாதார பரிசோதகர்களுடன், கொழும்பிலிருந்தும், குருநாகலையிலிருந்தும் வந்த சுகாதார பரிசோதகர்களும் சுகாதார வசதிகளைச் செய்வதில் தீவிரமாக ஈடுபட்டுவந்ததாக மன்னூர் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் பவளத்துரை எயம்பிடம் தெரிவித்தார் கடல் கொந்தளிப்பால், மாடுகள், எருமைகள், குதிரைகள் உட்பட சுமார் 700 மிருகங்கள் இறந்துகிடந்ததாகவும் இவை யாவும் தக்க முறையில் அடக்கம் செய்யப்பட்டதாகவும், இலையான், கொசு போன்ற தொற்றுநோய் பரப்பிகளுக்கு மாவட்டம் முழுவதிலும் மருந்து தெளிக்கப்பட்டதாகவும். சகல கிணறுகளுக்கும் 'குளோரின்' ஊற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார். தொற்று நோய்கள் பரவக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாலேயே தாம் இப்பொழுது தடை மருந்துகளை ஊசிமூலம் மன்னூருக்கு வந்து போகும் வெளியூர் பிரயாணிகளுக்கு ஏற்றுவதாகவும் அவர் தெரிவித்தார். இதே போன்று மன்னூரிலுள்ள எல்லோருக்கும் தடைமருந்து ஏற்ற நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் வைத்திய அதிகாரி தெரிவித்தார். மன்னூரிலுள்ள மக்கள் அனைவரும் சுடு தண்ணீரையே அருந்த வேண்டும் என சுகாதார அதிகாரி மக்களைக் கேட்டுள்ளார்.

அகதிகள் தங்கியிருக்கும் இடங்களில், சுகாதார வசதிகள் யாவற்றையும் சுகாதார இலாகாவினர் செய்து வருகிறனர். பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகளுக்கு பால் உணவு வகைகளும் கொடுத்து உதவப்பட்டது. மாவட்டத்தின் சுகாதார நலனைப் பேணுவதில் சுகாதார இலாகாவினருடன் மற்ற இலாகாவினரும் உதவி புரிந்தனர். இயற்கையின் சீற்றத்திற்கு ஆளாகியிருக்கும் மக்களுக்கு ... தக்க நடவடிக்கைகள் எடுத்து வரும் சுகாதார இலாகாவினர் பாராட்டப்படவேண்டியவர்களே. மக்களை தொற்று நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்த சுகாதார இலாகாவினர் எங்கள் கையிலும் ஒவ்வொரு ஊசியை ஏற்றி அனுப்பி வைத்தனர்!

ஃ ஃ ஃ

இரண்டரை மைல் நீளம் உள்ள தாம்போதி எவ்வளவு கேவலமான முறையில் கடல் அலைகளால் உடைக்கப்பட்டதென்பதை முன்னரே குறிப்பிட்டிருந்தோம். மன்னூர் நகரத்தையும் தீவின் ஏனைய பகுதியையும் தொடர்பு படுத்தும் இந்தத் தாம்போதி உடைந்தமையாலேயே மக்களுக்கு உணவு, உடைப்பஞ்சம் ஏற்பட்டதென்பதும் தெளிவு எனினும் போக்குவரத்தைச் சீர்குலைத்து மன்னூர் மக்களை அவஸ்தைக்குள்ளாக்கியிருக்கும் இத்தாம்போதியை திருத்தவேணும். தற்காலிகமாக ஏதாவது நடவடிக்கை எடுக்காமலும் இருப்பது குறித்து எவரும் கவலைப்படாமலிருக்க முடியாது. பொதுமராமத்துப் பகுதியினர் இனியாகுதல்தக்க நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேம்.

பல மைல் தூரத்துக்கு அழித்தொழிக்கப்பட்ட புகையிரதப் பாதையைக் கூடிய விரைவில் சீர்செய்து சென்ற திங்கட்கிழமை தொடக்கம் முன்னர்போல் புகையிரதச் சேவை நடத்திவரும் புகையிரதப் பகுதியினரைப் பாராட்டாமல் இருக்க முடியாது. பல இடங்களில் கடல் அலைகளால் அள்ளப்பட்டுச் சென்ற பாதையை 1000க்கும் மேற்பட்ட ஊழியர்கள் முகாம் அமைத்து சுறுசுறுப்புடன் சீர்செய்ததைக் கண்டபோது மனதில் மகிழ்ச்சி ஏற்படாதிருக்குமா? பத்து அல்லது பதினைந்து முகாம்களில் இருந்து தாங்களே சமைத்துக்கொண்டு அவ்வளவு ... டும் மக்களின் நலனை மனதில் கொண்டுசெயலாற்றிய புகையிரத இலாகா ஊழியர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே இந்த நடவடிக்கைக்கு ஆதாரமாக இருந்த ஜெனரல் மனேஜர் திரு. ரம்பாலாவையும், பிரதம எஞ்ஜினியர் திரு வைத்திலிங்கத்தையும் பிரமுகர்களும், பொதுமக்களும் புகழ்ந்ததை நாம் கேட்டறிந்தோம். யுத்தத்தால் அழிந்த நகரம்போல மன்னூர் மாவட்டம் முழுவதுமே அழிந்து, சிதைந்து இருக்கும் குரூர காட்சி சகிக்க முடியாத ஒன்ருகும். நகரையும் கிராமப்புறங்களையும் சென்று பார்வையிட்டபோது மன்னூர்ப் பகுதி முன்னர் இருந்த நிலைக்கு வருவதற்கு இரண்டு அல்லது மூன்று வருடங்கள் கூடப் போதாது என்றே கூறத்தோன்றுகிறது. சேதத்தால் ஏற்பட்ட நஷ்டம், மக்களுக்கு ஏற்பட்ட கஷ்டம் சீராவதற்கு எவ்வளவு காலமாகும் என்று எல்லாவற்றையும் சேர்த்து நினைக்கும்போது மனமுருகுகிறது. மன்னூர் பகுதியை முன்னைய நிலைக்கு புனருத்தாரணம் செய்ய அரசாங்கமும் அப்பகுதி மக்களும் தீவிர முயற்சி எடுப்பார்கள் என்று நம்புவோம்.

## சம்பள உயர்வு கிடைக்கும்

கொழும்பு வியாழன்

சிங்களத்தில் தேர்ச்சியடையவில்லை என்ற காரணத்திற்காக சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்பட்டிருக்க அரசாங்க ஊழியர்களில் சிலருக்கு சம்பள உயர்வு கொடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

கடந்த வருட நடுப்பகுதியில் நடைபெற்ற மந்திரிசபை உபகமிட்டியின் உத்தரவுப்படி முன்னர் இவர்களின் சம்பள உயர்வு நிறுத்தப்பட்டு இருந்தது. 1956-ம் ஆண்டுக்கு முன்னர் சேர்ந்த பழைய ஊழியர்களே சம்பள உயர்வு கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தார்கள்; இவர்களில் பலருக்கு இப்பொழுது சம்பள உயர்வு அளிக்கப்படுகிறது.

## 2 வார அவகாசம்

### அரசாங்க ஊழியருக்கு

கொழும்பு, செவ்வாய்

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சூருவளி ஏற்பட்டபோது காரியாலயத்திற்கு செல்லாத 60 அரசாங்க ஊழியர்களிடம் ஏன் அவர்களை வேலையிலிருந்து நீக்கக்கூடாதென்பதற்கு விளக்கம் கோரி இருவாரம் அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்த உத்தியோகத்தரில் அநேகர் சூருவளி நடந்ததினம் அனுமதி பெருமல் வேறு இடத்திற்கு சென்றுவிட்டார்கள்.

யாழ்ப்பாணத்தை சுற்றி வசிக்கும் நூற்றி நாற்பது மீன்பிடிகாரர்கள் அண்மையில் ஏற்பட்ட சூருவளியினுல் இறந்துள்ளதாக மீன்பிடி இலாகாவைச் சேர்ந்த திரு. ரி. பத்மநாதன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணப் பகுதியில் 60 இயந்திரப் படகுகள் நீரில் மூழ்கி விட்டனவென்றும், 45 படகுகள் பலத்த சேதமடைந்துள்ளதாகவும் திரு பதமநாதன் மேலும் தெரிவித்தார்.

மன்னூர்ப்பகுதியில் 125 படகுகள் முற்றுகச் சேதமடைந்து விட்டன. இப்படகுகளில் 80 படகுகள் வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர்களுக்குச் சொந்தமானவை. பத்தாயிரம் ரூபா பெறுமதியான நைலோன் மீன்பிடி வலைகள் மன்னூர்ப் பகுதியில் மூழ்கிவிட்டன.

மன்னூர், வவுனியா, திருக்கோணமலை பகுதியில் சூருவளியால் பலத்த சேதமடைந்த நூற்றுக்கும் அதிகமான பாடசாலைகள் இன்னும் சில வாரங்கள் சென்ற பின்பே ஆரம்பிக்கப்படும். இப்பாடசாலைகளில் அதிகமானவை முற்றுகச் சேதமடைந்து விட்டன. இப்பாடசாலைகள் மீண்டும் புதிதாகக் கட்டப்பட வேண்டிய நிலையிலுள்ளன. இப்பாடசாலைகளைப் புதிதாகக் கட்டுவதற்கு 75,000 ரூபா தேவைப்படுமென்று கல்வி இலாகாவைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

சூருவளியினுல் ஏற்பட்ட சேதங்களுக்கு பொது நிதியிலிருந்து ஒரு கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்த பகுதிகளைத் திருத்துவது சம்பந்தமாக ஒரு மகாநாட்டைக் கூட்டி ஆலோசனை செய்ய சமூகசேவை அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஏ. எஸ். கோகோபான் விக்கிரமக முயற்சி எடுத்து வருகிரூர்.

## திருமலைக்கு உணவு, உடை

நல்லூர், வெள்ளி

திருக்கோணமலையில் சூருவளியினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அடுத்த வாரத்திற்கு வேண்டிய உணவு, உடைகளை விரைவில் அனுப்பித் தரும்படி தமிழரசுக்கட்சியிடம் திருமலை முன்னுள் எம். பி. திரு. எஸ். எம். மாணிக்கராஜா கோரியுள்ளார்.

வடபகுதியிலிருந்து திருமலையில் நிவாரணமளிப்பதற்காகச் செல்லவிருந்த தொண்டர்கள் திரு. மாணிக்கராஜாவின் வேண்டுகோளின் பிரகாரம் தமது பிரயாணத்தை ரத்துச் செய்துள்ளனர். மக்களுக்குத் தேவையான உணவுப் பொருட்களையும் உடைகளையும் சேகரிப்பதில் ஈடுபட்டுள்ளனர். இவ்வார இறுதிக்குள் திருமலைக்கு இப்பொருட்கள் அனுப்பி வைக்கப்படும். தொடர்ந்து சில வாரங்களுக்கு உதவியளிக்கும்படி திருமலை முன்னுள் எம். பி. கோரியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தோனேஷிய தலைமைப் பிரதிநிதியும் தாயகம் திரும்பினர்

## ஐ. நா. விலிருந்து விலகுவது தவிர்க்கமுடியாதென்கிறர் சுகர்னே

நியூயோர்க், ஜன. 7

ஐ. நா. விலுள்ள இந்தோனேஷியா தலைமைப் பிரதிநிதி நேற்று ஜாகர்த்தாவுக்குப் புறப்பட்டார். அவா திரும்பிவருவாரா என்பதுபற்றித் தெரியவில்லை.

கடைசியாக அவர் நேற்று ஆசிய-ஆபிரிக்க பிரதிநிதிகளின் மகாநாட்டில் கலந்து கொண்டார். இது ஒரு பிரியாவிடை எனக் கருதப்படுகிறது. ஐ. நா.விலிருந்து வாபஸ் பெறுதிருக்குமாறு ஆசிய-ஆபிரிக்க பிரதிநிதிகள் அப்போது வற்புறுத்தினர்.

பாதுகாப்பு சபையிலுள்ள மலேஷியப் பிரதிநிதிகள் சபையின் இதரநாட்டுப் பிரதிநிதிகளுடன் நேற்று பேச்சு நடத்தினர்.

இதற்கிடையில் மலேஷியாவிலுள்ள 14 ராஜ்யங்களிலும் ராணுவப்பயிற்சி நிலையங்கள் திறக்கப்படுவதாக பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் அறிவித்தார்.

ஜாகர்த்தாவில் நேற்று ஒரு கூட்டத்தில் பேசிய ஜனதிபதி சுகர்னோ, ஐ. நா.விலிருந்து இந்தோனேஷியா விலகுவது தவிர்க்க முடியாதது எனக் குறிப்பிட்டார்.

### வெற்றி தோல்வி இன்றி முடிவு

கேப்டவுன், ஜன. 7

தென் ஆபிரிக்காவுக்கும இங்கிலாந்துக்குமிடையே இங்கு நடைபெற்ற மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது. ஸ்கோர் விபரம்:-

தென்னுபிரிக்கா

1-ம் இன்னிங்ஸ் 7 விக்கட்டுக்கு 501 ரன்கள்.

2-வது இன்னிங்ஸ் 346 ரன்கள்.

இங்கிலாந்து

1-ம் இன்னிங்ஸ் 442 ரன்கள்.

2-ம் இன்னிங்ஸ் விக்கெட் நஷ்டமின்றி 15 ரன்கள்.

# இந்தியாவுக்குபிரிட்டிஷ்ராணுவ உதவிபற்றி அயூப் கண்டனம்

ராவல்பிண்டி, ஜன. 7

அமெரிக்காவின் கொள்கையைவிட பிரிட்டனின் கொள்கையை பாகிஸ்தான் சந்தேகிக்க ஆரம்பித்திருக்கிறது என ஜனதிபதி அயூப்கான் கூறினர்.

"பிரிட்டனுடன் பாகிஸ்தானுக்குள்ள உறவு நம்பிக்கையின் அடிப்படையிலானது. பழைய நட்புநாடு என்ற ஹோதாவில் எப்போதும் அப்படியே இருக்கும் என நம்புவோம். எனினும் இந்தியாவை ஆயுதபாணியாக்குவதில் அமெரிக்காவுடன் சேர்ந்து பிரிட்டனும் மும்முரமாய் இருக்கிறது என்றும் அயூப்கான் கூறினர்.

அமெரிக்காவும், பிரிட்டனும் ரஷ்யாவும் இந்தியாவுக்குப் போட்டி போட்டுக் கொண்டு ஆயுதஉதவி வழங்குவது பாகிஸ்தானுக்கு ஒரு அபாயகரமான நிலைமையை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த ராணுவ பலத்தை இந்தியா எங்கே உபயோகிக்கப் போகிறது என்பதே எங்கள் கேள்வி" என்றும் அயூப் கூறினர்.

"இந்தியாமீது படையெடுக்கும் அளவுக்கு சீன முட்டாளல்ல. இந்தப் பெரும் ஆயுத உதவி சீன-இந்திய தகராறுக்கு எவ்விதப் பைசலும் காணுது. எனவே இந்த ஆயுதங்களை இந்தியா யார்மீதாவது உபயோகித்தாக வேண்டும். நாங்கள்தான் இந்தியாவின் முதல் நம்பர் எதிரி

ராணுவ பலத்தின் மூலமே இந்தியா தன் பிரச்னைகளைத் தீர்க்க முயன்றிருக்கிறது. மேற்கு நாட்டு ஆயுத உதவி காரணமாக பாகிஸ்தானைவிட ஐந்து அல்லது ஆறு மடங்கு பலத்துடன் இந்தியா விளங்குகிறது. காஷ்மீர் விஷயத்தில் அமைதித் தீர்வு ஒன்றை நாடுவதே பாகிஸ்தானின் நோக்கம்" என்றும் ஜனதிபதி அயூப்கான் குறிப்பிட்டார்.

# காங்கோ கிளர்ச்சிக்காரருக்கு சீன யந்திர துப்பாக்கிகள்

## 2 லொறிகளுடன் பிடிபட்டன

நியூயோர்க, ஜன. 7

3 டிரக்குகள் நிறைய சீன யந்திரத் துப்பாக்கிகளை காங்கோ அரசாங்கப் படைகள் கைப்பற்றியிருப்பதாக, பாதுகாப்புசபையில் காங்கோ பிரதிநிதி தெரிவித்தார். ரஷ்யாவில் உற்பத்தி செய்யப்பட்ட இந்த லொறிகள் மூலம் கிளர்ச்சிக்காரர்களுக்கு சீன ஆயுதங்கள் அனுப்பப்பட்டதாயும், சூடான் எல்லையில் இவை காணப்பட்டதாயும் அவர் கூறினர். வேறு பல ஆபிரிக்க நாடுகளும் கிளர்ச்சிக்காரர்களுக்கு உதவி செய்வதாய் அவர் தெரிவித்தார்.

காங்கோ பிரதமர் ஷோம்பே தனது பெல்ஜிய விஜயத்தை ஒத்திவைத்திருக்கிறர். காங்கோ பிரச்னையைத் தீர்க்க ஒரே வழி கிளர்ச்சிக்காரர்கள் வசமிருக்கும் எல்லாப் பகுதிகளையும் விடுவிப்பதே ஆகும் என அவர் கூறினர்.

### ஹவாயில் இலங்கைஅறிஞர்கள்

ஹாவாய், ஜன. 6

ஹாவாய் மாநிலத்திலுள்ள ஹொனலுலு நகரிலிருக்கும் கிழக்கு-மேற்கு நிலையத்தில், இலங்கை உட்பட ஏனைய தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பொதுப் பிரச்னையான உணவுப் பஞ்சம், நோய்க்கிருமி ஒழிப்பு முதலானவற்றுக்கு பரிகாரம் காணும் முகமாக மாணவர்கள் ஆராய்ச்சி நடத்துகின்றனர்.

### பாரத அறிஞருக்கு ரஷ்ய பட்டம்

மாஸ்கோ, ஜன. 7

பாரத அறிஞர் நாகேந்திர சிங்குக்கு "டாக்டர் ஆப்லா" என்ற விஞ்ஞானப் பட்டத்தை மாஸ்கோ பல்கலைக் கழகம் வழங்கியிருக்கிறது. "அணு ஆயுதமும் சர்வதேச சட்டமும்" என்ற அவரது நூல் 1962ல் ரஷ்ய மொழியில் பெயர்க்கப்பட்டு, அங்கு பிரசுரமாகியது. இந்தச் சிறப்பு [illegible] பட்டம் வழங்கப்பட்டது.

### குமாய்தீவு மீது தாக்குதல்

தைப்பே, ஜன. 7

குமாய்தீவை சீன பீரங்கிகள் மீண்டும் தாக்கியதாக பேர்மோஸா அரசாங்கம் அறிவித்தது.

### "ஆளும் கட்சிக்கு சிறு மெஜாரிட்டி"

வேலூர், ஜன. 7

பார்லிமெண்டிலோ, அசெம்பிளிகளிலோ, நகரசபைகளிலோ ஆளும் கட்சிக்கு சிறு மெஜாரிட்டி இருப்பது தான் நல்லது என்றும், அப்போது தான் அவர்கள் எதையும் உஷாருடன் செய்வார்கள் என்றும் ராஜாஜி தமக்களிக்கப்பட்ட வேலூர் நகரசபை வரவேற்பில் கூறினர்.

### ஜப்பானுக்கு முதலிடம்

லண்டன், ஜன. 7

1964-ம் ஆண்டில் உலகில் கப்பல் கட்டுவதில் ஜப்பான் முதலிடத்தைப் பெற்றது. அங்கு கட்டப்பட்ட கப்பல்களின் எடை 40 லட்சம் டன்.

### தானியங்கும் துப்பாக்கிகள்

கல்கத்தா, ஜன: 7

தானே தோட்டாக்களை நிரப்பிக் கொண்டு, 40 முறை சுடக்கூடிய துப்பாக்கிகளை, இங்குள்ள ஆயுத உற்பத்தி தொழிற்சாலை மாதம் 2500க்கு மேல் உற்பத்தி செய்வதாக அறிவிக்கப்படுகிறது.

### பிரெஞ்சு பிரதமர்

பாரிஸ, ஜன. 7

பிரெஞ்சு பிரதம மந்திரி திரு. பொம்பிடோ இந்தியாவுக்கு விஜயம் செய்யும் பொருட்டு அடுத்த மாதம் 4-ம் திகதி பாரிசை விட்டுப் புறப்படுகிறர்.

இலங்கைக்கு

### காங்கிரஸ் காரிய கமிட்டி அனுதாபம்

துர்க்காபூர், ஜன. 7

கேரளத்தில் நடைபெறவிருக்கும் தேர்தலில் எந்தக் கட்சியுடனும் உடன்பாடு செய்துகொள்ளத் தேவையில்லை என இங்கு கூடிய காங்கிரஸ் காரியக் கமிட்டி தீர்மானித்திருக்கிறது. இலங்கையிலும், இராமேஸ்வரத்திலும் கடல் கொந்தளிப்பு, புயலிலும் ஏற்பட்ட உயிர்ச்சேதம் குறித்து காரியக்கமிட்டி அனுதாபம் தெரிவித்தது.

# 450 தென்வியட்னுமதுருப்புகள் கொல்லப்பட்டனர்

## சென்ற ஆண்டில் பல்லாயிரக்கணக்கில் உயிர்ச் சேதம்

ஹானேய், ஜன. 7

அமெரிக்க, தென்வியட்னும் போர்க்கப்பல்கள் வடவியட்னுமைத் தாக்கியதாக, வடவியட்னும் மீண்டும் குற்றஞ்சாட்டியிருக்கிறது. திருப்பிச் சுட்டவுடன் இவைகள் விலகிச் சென்றுவிட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

எனினும் இத்தாக்குதல் பற்றிய குற்றச் சாட்டை அமெரிக்க ராஜாங்க இலாகா மறுத்திருக்கிறது.

சமீபத்தில் சைகோனுக் கருகில் வியட்காங்கிகளுடன் நடைபெற்ற யுத்தத்தில் 450 தென்வியட்னும் அரசாங்கத் துருப்புக்கள் கொல்லப்பட்டதாயும், 140 கம்யூனிஸ்டுகள் கொல்லப்பட்டதாயும அமெரிக்க அதிகாரி ஒருவர் கூறினர்.

சென்ற ஆண்டு தென்வியட்னும் தரப்பில் 1300 பேர் மாண்டதாயும், வியட்காங் தரப்பில் 21000 பேர் கொல்லப்பட்டோ, காணுமலோ, காயமடைந்தோ போயினர் என்றும் அவர் மேலும் கூறினர்.

வடவியட்னும் தரப்பில் 30,000 துருப்புக்களும், பீரங்கிப் படைகளும் போரில் ஈடுபட்டிருப்பதாயும், கனரக ஆயுதங்களுடன் அவர்கள் பலம் பெற்றிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

# கராச்சி கைகலப்பில் இதுவரை 20 பேர் பலி

கராச்சி, ஜன. 7

கராச்சி கைகலப்பில் இதுவரை பலியானவர்கள் 20 என அறிவிக்கப்படுகிறது.

பாதிக்கப் பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு ஜனதிபதி அயூப்கான் உத்தரவிட்டிருக்கிறர். அமைதியை ஏற்படுத்த கராச்சி மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டிருக்கிறர்.

200 தேர்தல் கல்லூரி உறுப்பினர்கள் ஒன்றுகூடி சமாதானக் கமிட்டிகளை அமைத்திருக்கிறர்கள்.

கராச்சியில் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்ட போதிலும் இரவு 9 மணி முதல் காலை 7 மணிவரை அமுல் நடத்தப்பட்டு வருகிறது. துருப்புக்கள் தொடர்ந்து ரோந்து சுற்றி வருகின்றன.

நேற்று கத்திக்குத்து சம்பவம் ஒன்றும் அறிவிக்கப்பட்டது.

பெருமளவு வீடுகளும், குடிசைகளும் எரிக்கப்பட்டன என்றும், கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன என்றும் நேற்றைய செய்தி கூறியது.

மிஸ் பாதிமா ஜின்னு இப்பகுதிகளைப் பார்வையிட்டபின், சம்பவம்பற்றி நியாய விசாரணை நடத்த வேண்டும் என மீண்டும் கேட்டுக்கொண்டார்.

# "சீனப்பிராந்தியத்திலிருந்து உடன் வெளியேறுக"

## இந்தியாவுக்கு பீகிங் ஆட்சேபம்

புதுடில்லி, ஜன. 7

சிக்கிம் எல்லையில் சீனப் பிராந்தியத்துக்குள் இந்தியத் துருப்புக்கள் ஊடுருவி அகழிகள், தகவல் தொடர்புகள் அமைப்பதை உடன் நிறுத்துமாறும், அங்கிருந்து உடன் வாபஸ் பெறுமாறும் சீன இந்தியாவுக்கு ஆட்சேபனைக் குறிப்பு அனுப்பியிருக்கிறது.

இந்த ஆட்சேபனை அபத்தம் என்றும், முழுப் பொய் என்றும் சிக்கிமுக்குள் தன் சொந்த ஆக்கிரமிப்பை மறைக்கவே சீன இப்படிச் செய்வதாயும் டில்லியில் அறிவிக்கப்பட்டது.

இந்தியத் துருப்புக்கள் 27 ராணுவ அமைப்புக்களை நிறுவியிருப்பதாகவும், சீனப்பிராந்தியத்தில் 59 எருமை மாடுகளை இந்தியத் துருப்புக்கள் ஓட்டிச் சென்றதாகவும் சீன அறிவித்திருந்தது.

### சீனத்தலைவர்களுக்கு அயூப். வாழ்த்து

ராவல்பிண்டி, ஜன. 7

சீனக் குடியரசுத் தலைவர் லியூ ஷாசீயும், பிரதமர் சூ-என்-லாயும் மீண்டும் பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது குறித்து பாகிஸ்தான் ஜனதிபதி அயூப்கான் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருக்கிறர்.

ஜனதிபதி அயூப்கான் வெற்றிபெற்றதைப் பாராட்டி பிரெஞ்சு அதிபர் டிகால், ஜனதிபதி சுகர்னே, நைஜீரிய பிரதமர், ஜப்பான் பிரதமர், குவாய்த் அதிபர், செண்டோ, சீட்டோ பொதுக்காரியதரிசிகள், மொருக்கோ இளவரசர் ஆகியோர் செய்திகள் அனுப்பியிருக்கிறர்கள்.

### ஏற்பு மரணம அதிகரிப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணத்தில் கவனயீனத்தால் ஏற்பு மரணங்கள் மேலும் மேலும் அதிகரித்து வருகிறதேயன்றி குறைவதாகக் காணவில்லையென்று ஏழாலையைச் சேர்ந்த மவுனிகாந்தனின் மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை நடத்திய யாழ்ப்பாணம் நகரபகுதி மரணவிசாரணை அதிகாரி திரு ஏ. அமிர்தலிங்கம் கூறினர்.

காலஞ்சென்றவரின் தந்தை சிதம்பரம்பிள்ளை- முருகேசு சாட்சியமளித்தபோது கூறியதாவது:-

காலஞ் சென்ற எனதுமகன் கடந்த மாதம் 29-ந் தேதி காதுவலியினுல் கஷ்டப்பட்டார். நாங்கள் காதுக்குள் உப்புத் தண்ணீரை விட்டோம். அதன்பின் அவர் சுகமாக இருந்தார். இரண்டுநாள் கழிந்து எனது மகனின் காது வீக்கமடைந்தது. தொண்டைக்குள் நோ இருப்பதாகவும் கூறினர். மறுநாள் எனது மகனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்ளேம். அங்கே அவர் மரணமானுர்.

டாக்டர் எல். சிற்சபேசன் சாட்சியமளித்தபோது ஏற்பினுல் மரணம் சம்பவித்ததெனக் கூறினர்.

உப்புத் தண்ணீரில் அழுக்கு இருந்தபடியால்தான் ஏற்பு உண்டாகியதாகக் கூறிய மரணவிசாரணை அதிகாரி இயற்கை மரணமெனத் தீர்ப்பளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்வந்தர் கூட்டுறவு முறையில் தொழில் ஆரம்பிக்கவேண்டும்

## வேலையில்லாத் திண்டாட்டம் நீங்க உடுப்பிட்டி முன்னாள் எம். பி. யோசனை

உடுப்பிட்டி, வியா.

"தமிழர்கள்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சிங்கள அறிவு இல்லாமைதான் இதற்குக் காரணம் என்பதை ஒப்புக்கொள்ள முடியாது. பட்டம் பெற்று சிங்களத்தில் எஸ். எஸ். சி. சித்தியடைந்வர்கூட வேலையில்லாமல் இருக்கிறார்கள். இதற்கெல்லாம் முக்கிய காரணம் கல்வித்திட்டத்திலுள்ள கோளாறுதான். இன்றைய நிலைக்கேற்ப முதலில் வேலையில்லாதோர் ஓரணிசேரவேண்டும். தங்களின் நியாயமான கோரிக்கையை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டும். எத்தொழிலையும் செய்ய இளைஞர்களே முன்வரவேண்டும்." இவ்வாறு உடுப்பிட்டி முன்னாள் எம். பி. திரு. மு சிவசிதம்பரம் புலோலி கூவில் வீரபத்திர கோவிலருகில் நடைபெற்ற அகில இலங்கை வேலை வேண்டுவோர் கழகக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்,

தொடர்ந்து பேசுகையில் அவர் கூறியதாவது: "பணம் படைத்த கனவான்கள் கூட்டுறவு முறையில் தொழில்களை ஆரம்பிக்க முன்வரவேண்டும். அரசாங்கம் தொழில் திட்டங்களை உருவாக்கும் என்று நம்புவதில் பிரயோசனமில்லை. அவர்கள் தமிழ் மக்களுக்குப் பாரபட்சம் காட்டுவார்கள்' இதை நாம் பாராளுமன்றத்திற் பலமுறை வற்புறுத்தியும் செவிடன் செவியில் ஊதிய சங்குபோல எடுபடாமல்போய் விட்டது. கூட்டுறவு முறையால் சாதிக்க முடியாதது ஒன்றுமில்லை. காங்கேசன் துறைமுக அபிவிருத்திக்காக மேற்கு ஜெர்மனி கடனாகக் கொடுத்த பணத்தில் தென் இலங்கையில் ஆஸ்பத்திரி கட்டி இருக்கிறார்கள். துறைமுக அபிவிருத்திக்கு அப்பணத்தைப் பயன்படுத்தியிருந்தால் ஆறுண்டுகளில் கடனையும் அடைத்து தேச வளர்ச்சிக்கான பணத்தையும் மிச்சப்படுத்தியிருக்கலாம். வல்லிபுரக் கோவில் மணலில் முந்திரிகைச் செடி வளர்த்தால் கோளத்தைப்போல இங்கும் முந்திரிகை ஏற்றுமதிசெய்ய முடியும். இம் மணற்பிரதேசத்தில் கண்ணாடித் தொழிற்சாலையை நிறுவினால் 8000 வாலிபர்களுக்கு வேலைவசதி கிடைக்கும். உப்பு இறக்குமதி செய்கின்ற பரிதாபநிலை மாற வேண்டுமானால் ஆனையிறவு உப்பளத்தை விருத்திசெய்ய வேண்டும். இதனால் சுயதேவை பூர்த்தியாவதுடன் ஏற்றுமதிக்கும் வாய்ப்புண்டு."

திரு. க. ஜெயக்கொடி பேசுகையில், நாடு நமது நாடானால் தான் எங்கள் குறைகள் முழுக்க முழுக்க நீங்கும். அதற்கிடையில் அரசாங்க உத்தியோகத்தை மாத்திரம் நம்பியிராமல் மானத்துடன் சிறு தொழில்களையும் செய்ய முன் வரவேண்டும். நெசவுத்தொழிலுக்கு முக்கியத்துவமளிக்க வேண்டும். பெண்கள் வெங்காயக் கூடை பின்னுதல், கயிற்று கார் பின்னுதல் முதலிய சிறுகுடிசைக் கைத்தொழில்களில் ஈடுபட வேண்டும். விவசாயத்தை விஞ்ஞானரீதியில் வளர்க்கவேண்டும். பொருளாதார சுதந்திரத்தைவிட அரசியல் சுதந்திரம்தான் எமக்கு முக்கியம். நல்ல அரசு இருந்தால் பொருளாதாரத்தை நன்மாகவே வளர்த்துக்கொள்ள முடியும்" என்று கூறினார்.

திருமதி பர்வதம் வைத்திலிங்கம் பேசுகையில், "சோஷலிச சமுதாயம் மலர்ந்து ஆண்களோடு பெண்களும் சரிநிகர்சமானமாக வாழத் தலைப்பட்டால் சமூகத்தின் நிலை உயரும். பெண்கள் விவசாயம் செய்யும் வாலிபரை மணக்க

வெட்கப்படக்கூடாது. அவர்களை மணந்தால் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்தவர்களாவார்கள்" என்று கூறினார்.

கூட்டத்திற்கு திரு. கே. சி இராசசிங்கம் தலைமைவகித்தார். செயலாளர் சபாரத்தினம் நன்றி கூறினார்.

## காரியாதிகாரியின் எச்சரிக்கை

நல்லூர், வியா

அத்தியாவசிய உணவுப் பொருட்கள் மறைத்து வைத்திருப்பதனையோ, அதிக விலைக்கு அ பொருட்களை விற்பனை செய்வதனையோ கண்டு பிடித்தால் அந்த வர்த்தகர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்று வலி - வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை மயிலிட்டியில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

மயிலிட்டியில் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சிமிந்தித் தொழிற்சாலையினர் உதவிய உணவுப் பொருட்களையும் புடவைகளையும் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா, வலி - வடக்கு காரியாதிகாரி திரு. டி. முருகேசம்பிள்ளை, வலி - வடக்கு கிராம முன்னேற்றச்சங்கங்களின் சமாஜத்தினர் ஆகியோர் விநியோகஞ்செய்தனர் இதனைத் தொடர்ந்து நடைபெற்ற கூட்டத்தில் காரியாதிகாரி தொடர்ந்து பேசியதாவது:

"சமீபத்தில் வீசிய பெரும் புயலால் ஏராளமான மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்கவேண்டியது நமது கடமை. இந்த நிலையில் வாழ்க்கைக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களை மறைத்து வைப்பதும், கூடியவிலைக்கு விற்பதும் மன்னிக்க முடியாத செயலாகும். ஒவ்வொரு வார்த்தகளும் மனிதாபிமானத்துடன் இச்சந்தர்ப்பத்தில் நடந்துகொள்ளுதல் அவசியமாகும். மக்களுக்கு வேண்டிய பொருட்களைத் தடையின்றிக் கிடைக்க வகை செய்தல் வியாபாரிகளின் தலையாய கடமையாகும்

## 100 காலி ஸ்தானங்களுக்கு 50,000 பேர் மனு

கொழும்பு, வியா

இலங்கை இராணுவப் பகுதியில் காலியாக இருக்கும் நூறு வெற்றிடங்களுக்கு 50,000 பேர் மனுச்செய்துள்ளார்கள். மனுச்செய்தவர்களில் அநேகமானோர் எஸ். எஸ். சி, பரீட்சையிலும் அதற்குக் கூடிய தகுதியுள்ள பரீட்சையிலும் சித்தியெய்தியுள்ளனர். இவர்களில் சிலர் பட்டதாரிகள்.

இந்த பதவிக்கு வேண்டிய குறைந்த தராதரம் ஆறும் வகுப்பாகும். மனுச்செய்தவர்களில் கூடிய தராதரம் உள்ளவர்களே தெரிவுசெய்யப்படுவார்கள் என்று இராணுவ அதிகாரி ஒருவர் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார். இப்படி தெரிவுசெய்யப்பட்ட நூறு பேர்களும் மார்ச்மாதம் பயிற்சிக்கு அழைக்கப்படுவார்கள்

கொழும்பு, வியா

ரயில்வே ஜெனரல் மனேஜர் திரு. பி. டி. ரம்பால சென்ற திங்கட்கிழமை களனிக்கும் வாருகொடவத்தைக்குமிடையே இடம்பெற்ற ரயில் விபத்து சம்பந்தமாக விசாரணை நடத்த நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

இந்தவிபத்தில் ஒருவர்மரணமடைந்தார்; பலர்காயமடைந்தனர்.

## "வேலையில்லா கஷ்டம்நீங்க வழி!"

உடுப்பிட்டி, புதன்

"சோஷலிச அமைப்பினாலே தான் இந்நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கமுடியும். வேலையில்லாத் திண்டாட்டம் அரசியலுக்குப் புறம்பானதல்ல. தேர்தலில் போட்டியிடும் ஒவ்வொரு அரசியல் கட்சியும் இதற்கான நல்ல திட்டங்களைக் கொண்டிருக்க வேண்டும். மொழிப்பிரச்னை இப்பொழுது முக்கியமல்ல. குறுகிய தேசியங்களைப் பேசி நாட்டைக் கெடுத்து வருகின்ற அரசியல்வாதிகள் தான் இந்த வேலையில்லாத் திண்டாட்டம் உருவாகுவதற்குக் காரணபுருஷர்கள்."

இவ்வாறு பருத்தித்துறைக் கடற்கரை மைதானத்தில் நடைபெற்ற அகில இலங்கை வேலைவேண்டுவோர் கழகக் கூட்டத்தில் கலந்துகொண்ட கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு எஸ். ஜெயசிங்கம் பேசுகையில் கூறினார்.

நெல்லியடியச் சேர்ந்த கம்யூனிஸ்ட் பிரமுகர் திரு பி. குமாரசாமி பேசுகையில் குறிப்பிட்டதாவது :-

"பூர்ஷ்வா மனப்பான்மை கொண்ட அரசியல் வாதிகள் வேலையில்லாமல் அலைகின்ற வாலிபர்களை அனுப்பவெட்கப்படுகின்றனர். அவர்களுடைய கவனமெல்லாம் மொழிவெறியிலும் முதலாளித்துவ கூடாரங்களிலும் அடங்கிவிட்டது. அவர்களிடம் உருப்படியான திட்டங்கள் இல்லாத காரணத்தினாலேயே வாலிபர்களை விட்டுவிலகிச் செல்கிறார்கள். வேலையில்லாப் பிரச்னைக்குத் திட்டம் வைத்திராதவர்கள் அரசியலில் சாதிக்கப்போவது தான் என்ன? தொழிலாளர்கள்கூடத் தங்கள் கோரிக்கைகள் நிறைவேற ஊர்வலம் வர ... படுகிறார்கள்"

# புகையிலைத் தோட்டத்தில் நின்றவர் அடித்துக் கொலை

யாழ்ப்பாணம், வெள்ளி

நாவற்குளியைச் சேர்ந்த வேலாயுதம் (வயது 75) என்பவரின் மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய யாழ்ப்பாணம் நகரப்பகுதி மரண விசாரணை அதிகாரி திரு. ஏ. அமிர்தலிங்கம், கொலையெனத் தீர்ப்பளித்து தலைமறைவாக இருந்துவரும் எதிரி வேலாயுதத்தை கைதுசெய்ய வாரண்ட் பிறப்பித்தார்.

நாவற்குளியிலுள்ள புகையிலைத் தோட்டமொன்றில் காலஞ்சென்றவர் வேலை செய்துகொண்டிருந்த போதே இச்சம்பவம் நடந்ததாக கூறப்படுகிறது.

காலஞ்சென்றவரின் மனைவி செல்லாச்சி சாட்சியமளித்த போது கூறியதாவது:

சம்பவம் நடந்த தினம் நானும் கணவனும் புகையிலைத் தோட்டத்தில் இருந்தோம். அப்பொழுது எதிரி வந்து பொல்லினால் எனது கணவனின் கையிலும், காலிலும், வயிற்றிலும் அடித்தார் நான் சத்தம் போட்டு குளறினேன். செல்லையா என்பவ ஓடிவந்தார். எனது கணவர், ஒரு கார் கொண்டுவந்து தன்னை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போகும்படி கூறினார் கார் பிடித்து கணவனை ஆஸ்பத்திரிக்கு கொண்டுசென்றோம். அவர் ஆஸ்பத்திரியில் மரணமானார் ஒரு மாத காலத்திற்கு முன் எனது கணவனுக்கும், எதிரிக்கும் ஒரு வழக்கு நடந்தது அந்த வழக்கின் என் கணவனுக்கு சார்பாக தீர்ப்பளிக்கப்பட்டது. அந்தக் கோபத்தினால்தான் எதிரி இப்படி செய்திருக்கவேண்டும்.

பிரேத பரிசோதனை நடத்திய சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சிவஞானசுந்தரம் சாட்சியமளித்தபோது, காலஞ்சென்றவரின் கைகள் முறிந்திருந்ததாகவும், விலா எலும்பும் முறிந்திருந்ததாகவும் கூறினார்.

கொலை என மரணவிசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார்.

## அபேட்சகர்கள்

வல்வெட்டித்துறை, வியாழன்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திரு. குமாரசாமி மோதிலால்நேரு (24 வயது) அட்வக்கேட், கம்யூனிஸ்ட், சமசமாஜக்கட்சி சார்பில் பருத்தித்துறைத் தொகுதியில் போட்டியிடுவாரெனத் தெரிகிறது. இதே தொகுதியில் சுயேச்சை அபேட்சகராக அல்வாயைச் சேர்ந்த திரு. சின்னையா துரைராசா என்பவர் போட்டியிடுவார் எனத் தெரிகிறது.

## யாழ்ப்பாணம் திரும்பினார்

யாழ்ப்பாணம், வியாழன்

இந்தியாவில் தரும ஆதீன மகா சந்நிதானம் கௌமார மடாலய சுந்தர சுவாமிகள், பேரூர் ராமசாமி அடிகளார் ஆகியோரின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டும் தலயாத்திரையை முடித்துக்கொண்டும் வண்ணை வைத்தீஸ்வர தேவஸ்தான வித்துவான் திரு. வி. கே. ஆறுமுகம் யாழ்ப்பாணம் திரும்பியுள்ளார்.

## ஹிந்தி எழுத்தாளர் மகாநாடு

ஹைதராபாத், ஜன. 7

அடுத்த மாதம் ஹைதராபாத்தில் ஹிந்தி எழுத்தாளர் மகாநாடு ஒன்றை ஆந்திர பிரதேச அரசாங்கம் கூட்டவிருக்கிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தியாக அடிப்படையில் ஒற்றுமை ஏற்படவேண்டும்"

## அளவெட்டிக் கூட்டத்தில் திரு. வ. ந. நவரத்தினம் பேச்சு

மாவிட்டபுரம், வியாழன்

"சுயநல அத்திவாரத்தில் கட்டப்படும் ஒற்றுமை உண்மையான ஒற்றுமையாகாது'. இப்படிப்பட்ட போலி ஒற்றுமை மூலம் தமிழ் சமூகம் உண்மையான சுதந்திரத்தை பெற முடியாது. தமிழ் இனத்தின் அபாய நிலையை உணர்ந்து தன்னலமற்ற முறையில் தியாக அடிப்படையில் உண்மையான தேசபக்தர்களுக்கிடையில் ஏற்படும் ஒற்றுமையேதான் தமிழர்களுக்கு விமோசனமளிக்கும், நேற்று அளவெட்டி சேணக்கரை வயிரவர் கோவிலுக்கு எதிரே உள்ள திடலில் நடைபெற்ற தமிழரசுக்கட்சியின் பகிரங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய சாவகச்சேரி முன்னாள் எம். பி திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினர்.

வைத்திய கலாநிதி இ. அம்பலவாணர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. நவரத்தினம் மேலும் கூறியதாவது:

எமது கட்சி பாராளுமன்றத்திற்குள் நடத்தும் போராட்டதை ஒரு சிறு பகுதியாகவே கருதுகிறது. பாராளுமன்றத்தினுல் மட்டும் எமது சுதந்திரத்தைப் பெற்றுவிடலாமென்று கருதவில்லை.

தமிழரசுக்கட்சியின் பொதுக் காரியதரிசியும் வட்டுக்கோட்டைத் தொகுதியின் முன்னாள் எம் பி.யுமான திரு அ அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:- 'எல்லாக் கட்சியினருடைய தாக்குதலும் தமிழ்ப் பிரதேசத்தைப் பொறுத்தவரை தமிழரசுக் கட்சிமீதே திரும்பியிருக்கிறது. காய்த்த மரம் கல்லெறி வாங்குவது இயற்கையே. ஆயினும் தனித் தமிழ்நாடு கோருவோரும் இன்றைய ஒற்றையாட்சியில் எம் பிரச்னையைத் தீர்க்கவிரும்புவோரும் ஒன்றுசேர்ந்து எம் மீது தாக்குதலை நடத்துவது விசித்திரமே! ராஜரத்தினுவும், அமிர்தலிங்கமும் ஒரே மேடையில் பேசமுடியுமானுல் பொன்னம்பலமும் செல்வநாயகமும் ஏன் சேர்ந்து போட்டியைத் தவிர்க்கக் கூடாது? என்று திரு. சிவசிதம்பரம் கேட்கிறர் ஒரே மேடையில் ஒரு பொது விஜயத்தை யொட்டிப்பேசியவுடன் நாம் எமது கொள்கையை விட்டுவிட்டோமென்பது அர்த்தமல்ல. பத்திரிகைச் சட்டத்தில் ஒரே கருத்தைத் தெரிவிக்க ஒரே மேடையில் தோற்றினேம். ஆனல் தேர்தல் போராட்டம் இனத்தின் நீண்டகாலக் கோரிக்கையின் அடிப்படையிலேயே நடைபெறமுடியும் போராட்டத்திற்குத்தான் ஒற்றுமை தேவை. யுத்தத்தை நடத்த சேர்ச்சிலும் அட்லியும் ஒன்றுபட்டனர். உரிமைப் போரை நடத்துவதற்கு ஒற்றுமை தேவையில்லை என்

...ருள் போரை நடத்துவோரும் போரை எதிர்ப்போரும் ஒன்று சேர முடியுமா? இன்றைய தேவை கடந்த காலத்திலும் பார்க்கக் கூடிய ஒற்றுமையைத் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதுதான் அதற்கு வழி ஒரே கட்சியின் பிரதிநிதிகளை அனுப்புவதைத்தவிர வேறில்லை

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசியபின் முன்னாள் உடுவில் எம் பி. திரு. வி. தர்மலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் மார்ச் தேர்தலில் தமிழ் பேசும் மக்கள் ஆழ்ந்து சிந்தித்து வாக்களிக்கவேண்டும்.

முன்னாள் காங்கேசன்துறை எம். பியும் தமிழரசுக் கட்சித் தலைவருமான திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம், வழக்கறிஞர் திரு. க. நடராசா, திரு. க. ஸ்ரீமுருகன் ஆகியோரும் பேசினர்கள்.

கூட்டத்திற்குமுன் அளவெட்டி தவளக்கிரி முத்துமாரி அம்மன்கோவிலடியிலிருந்து திரு. செல்வநாயகம் அலங்கரிக்கப்பட்ட வண்டியில் ஊர்வலமாக மேளவாத்தியத்துடன் அழைத்து வரப்பட்டார்.


ஸ்ரீ மனேகரா
(யாழ்ப்பாணம்) போன்: 485
Daily at 4 7, 9-45 p. m.
NAYOKA
AND
THE TIGER MAN

REGAL — JAFFNA
NOW SHOWING
Debra Paget
Ettore Manni
in
TOMB OF THE PHAROAHS
(Ultrascope-EastmanColor)

ராஜா சினிமா
(சுழிபுரம்)
ஆனந்தன்
நடிக்கும்
விஜயபுரி வீரன்

2வது வெற்றி மாதம்!
வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
மாலை 2-30 இரவு 6-30, 9-30க்கும்
டி. எம். சௌந்தரராஜன்
நடிக்கும்
பட்டினத்தார்

3-வது வெற்றி வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு) மொடேர்ன் (பதுளை) ராஜ் (நீர்கொழும்பு)
14-ந் திகதி தொடக்கம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன் - சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
கர்ணன்
(ஈஸ்மென் கலர்)


## புதிய குரவருக்கு வரவேற்பு

உடுப்பிட்டி, வியா.

அண்மையில் குருப்பட்டம் தரித்தவரும் புலோலியைச் சேர்ந்தவருமான வண. பிலிப் யேசுதாசனுக்கு கரவெட்டி கத்தோலிக்க மக்களால் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது. புதிய குரவர் செல்வியடிச் சந்தியிலிருந்து தேவமாதா ஆலயத்திற்கு ஊர்வலமாக அழைக்கப்பட்டு ஆலயத்தில் அவரே திவ்வியபலிப் பூசையையும் நடாத்தி வைத்தார். பின்னர் வண. பிதா எல். அந்தோனிப்பிள்ளை தலைமையில் வரவேற்புக் கூட்டம் நடைபெற்றது. முன்னாள் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரமும் கலந்து கொண்டார்.

வண. பிதா ஜி. டீ. பாலசுந்தரம், திருவாளர்கள் வ. இராசையா, எஸ். அகஸ்தீன், மன்னவன் கந்தப்பு ஆகியோரும் வண. பிலிப் யேசுதாசனைப் பாராட்டிப் பேசினர்.

## இந்தியர்களுக்கும் நிவாரணம்

வவனியா, வியா.

வவனியா மாவட்டத்தில் உள்ள இந்திய வம்சாவளியினருக்கும் சேத கஷ்டம் மதிப்பிடப்பட்டு அரசாங்கத்தினுல் பணஉதவி கொடுக்கப்படும்.

வவனியாமாவட்டத்திலுள்ள சுமார் ஆயிரத்து இருநூறு இந்திய வம்சாவளியினரின் வீடுகள் புயலினுல் சேதமடைந்துள்ளன. இலங்கைப் பிரஜைகளுக்கு வழங்கப்படுவது போன்ற நிவாரணஉதவிகளும் சகல உதவிகளும் இந்திய வம்சாவழினருக்கு கொடுக்கப் படவேண்டுமென வவனியா முன்னாள் எம். பி. வவனியா மாவட்ட அதிபரையும் சமூக சேவை அதிபரையும் கேட்டுக் கொண்டதன் பயனுக இதற்கு வேண்டிய சகல ஆயத்தங்களையும் வவனியா மாவட்ட அதிபர் மேற்கொண்டுள்ளார்.

## கட்டுப்பணம்

சுன்னுகம், வியாழன்

இலங்கைச் சமசமாஜக் கட்சியின் சார்பில் உடுவில் தொகுதியில் போட்டியிடவிருக்கும் சுன்னுகம் பட்டினசபைத் தலைவரும் முன்னாள் செனட்டருமான திரு பொ. நாகலிங்கத்தின் கட்டுப்பணத்தை இணுவில் மக்கள் கட்டுவர். நிதிதிரட்டும் பணியில் இணுவில் சமசமா... [illegible] ...பட்டுள்ளனர்.

## சமயப் பிரசங்கங்கள்

யாழ்ப்பாணம், வியாழன்

இன்று வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல் 8 மணி வரை அகில இலங்கைப் பொதுஜன சேவைச் சங்கச் சமயப் பிரசாரசபையினரால் பின்வரும் தேவஸ்தானங்களில் சமயச் சற்பிரசங்கங்கள் நடைபெறும்.

நல்லூர் தேவஸ்தானம்-ஆசிரியை ஸ்ரீமதி வசந்தமலர் காதன் 'முருகோதயம்' என்னும் பொருள் பற்றியும், வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் திரு வ. கந்தசுவாமி 'எல்லாம் அவன்செயல்' என்னும் பொருள் பற்றியும், நாயன்மார்கட்டு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் திரு சி. தம்பிஐயா 'விரதங்களின் மகத்துவம்' என்னும் பொருள் பற்றியும், நல்லூர் கிழக்கு முத்தவிநாயகர் ஆலயத்தில் ஆசிரியர் திரு. க. முருகேசு 'அவன் அருள் இயக்கம்' என்னும் பொருள் பற்றியும் பிரசங்கம் செய்வர்.

## இந்தியாவில் இலங்கை சாரணர்

யாழ்ப்பாணம், வெள்ளி

டிசம்பர் மாதம் 26 முதல் 31-ந் திகதிவரை அலகாபாத்தில் நடந்தேறிய பாரத சாரணர்களது நான்காவது தேசிய ஜம்போறியில் கலந்துகொள்வதற்காக இலங்கை சார்பில் சென்றுள்ள கோஷ்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிச் சாரணர் குழுவைச் சேர்ந்த இராணியின் சாரணர்களாகிய வை. காத்திகேயன், வே. பாலகுமார், க. பிரபாச்சந்திரன், ப. சாட்சாதீஸ்வரன், உதவிச் சாரணராளர் நா. சிவபாதசுந்திரம் ஆகியோர் அங்கம் வகிக்கிறர்கள். மானிப்பாய் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மூன்று சாரணர்களும் சென்றுள்ளார்கள். இலங்கைக்கோஷ்டிக்குத்தலைவராக யாழ்ப்பாணம் சாரணர்சங்கக் காரியதரிசி திரு. ஆர் வி. இராசநாயகம் சென்றுள்ளார். இவர்கள் இம்மாத நடுப்பகுதியில் தாயகம் திரும்புவார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

## பம்பாய் விமான சேவை

கொழும்பு வியாழன்

ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்ட தினத்திற்கு முன்பு பம்பாய் விமான சேவையை ஆரம்பிக்க ஏயர் சிலோன் தீர்மானித்துள்ளது.

பம்பாய்க்கு நேரடியான விமான சேவையை பெப்ரவரி 11-ம் திகதி ஆரம்பிப்பதென ஏயர் சிலோன் முடிவு செய்துள்ளது. வாரத்திற்கு இரு தினங்கள் இச் சேவை நடைபெறும்.

ஜனவரி 14-ம் திகதி முதல் வாரத்திற்கு இரு தினம், யாழ்ப்பாணத்திலிருந்து திருச்சிக்கும் விமான சேவையை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

## திடீர் சோதனைக் குழு கண்காணிக்கும்

கொழும்பு, புதன்

நியமனப்பத்திரம் தாக்கலாகும் தினத்தன்று (இம்மாதம் 11-ந் திகதி) கொழும்புக் கச்சேரியிலும் ரிஜிஸ்தார் ஜெனரல் காரியாலயத்திலும் திடீர் சோதனைக்குழு கண்காணிப்பு நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறது.

கொழும்பு பொலிஸ் சூப்பிரின்டன் திரு. ஐ. டி. எம். வான்டு வெஸ்ட் இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

## ஏகாதசி விழா

கொழும்பு, வியாழன்

கொட்டாஞ்சேனை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம் வைகுண்டஏகாதசிவிழா இம்மாதம் 13-ந் திகதி நடைபெறும்.


## தேவை

யாழ்ப்பாண நகரிலுள்ள ஒரு அச்சகத்துக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் 'புரூவ்' வாசிப்பதற்கும், ஆங்கிலத்தில் கடிதம் எழுதுவதற்குமாக ஒருவர் தேவை. முன் அனுபவம் பற்றிக் குறிப்பிடுக

அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியவர்களின் விண்ணப்பங்களில் கூடிய கவனம் செலுத்தப்படும், சம்பளம் (எல்லாப் படிகளுமுட்பட) ரூபா 100லிருந்து ரூபா 150க்குள் தகுதிக் கேற்பகொடுக்கப்படும். 18-1-65க்கு முன் சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பிக்கவும். விண்ணப்பத்தின் ஆங்கில மொழி பெயர்ப்பும் சொந்தக் கையெழுத்தில் சேர்க்கப்படவேண்டும்.

(விளம்பர இல: 1251)
'ஈழநாடு' மேற்பார்த்து
யாழ்ப்பாணம்,
1251

வரி விளம்பரம்

### பொங்கல் வாழ்த்து

பல சைஸ்களில், அழகிய வர்ணப்படங்களடங்கிய பொங்கல் வாழ்த்து விற்பனைக்குண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். தமிழ்ப்பண்ணை, யாழ்ப்பாணம். 1398

### விற்பனைக்கு

வீட்டோடு 3 பரப்புக் காணி அம்மன் ரோட்டு கந்தர்மடத்தில விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: சிவசுப்பிரமணியம், 32, பழம் ரோடு, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 1411

C N 8726 A 40 விற்பனைக்கு உண்டு புதியடயர், புதிய பற்றறி. ஸ்ரீ ஆனந்தா பேக்கறி, தெல்லிப்பளை. 1409

### தேவை

பரிசாரக ஐயர், எஞ்சின் றைவர் (சாரதி)

நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி அம்மன்கோவிலுக்கு நல்ல அனுபவமுள்ள மடப்பள்ளி வேலையில் தேர்ச்சி பெற்ற பரிசாரக ஐயரும், மின்சார யந்திரத்தில் வேலை செய்யக்கூடிய திறமையானசாரதியுந்தேவை. பரிசாரக (மடப்பள்ளி) ஐயருக்கு மாத வேதனம் ரூபா 150 மின்சார எஞ்சின் சாரதிக்கு ரூபா 100. திருவிழாக்காலங்களுக்கும் விசேஷ தினங்களுக்கும் சகாயப்பணம் வழங்கப்படும், விண்ணப்பங்கள் காரியதரிசிக்கு 25-1-65-க்குக் கிடைக்கக்கூடியதாக எழுத்துமூலம் அறிவிக்கவும் கா. ஆறுமுகம். கௌரவ காரியதரிசி, 1414


## சேதங்கள் பற்றி மதிப்பீடு

நல்லூர், வெள்ளி

வடபகுதியில் சூறாவளியினுல் ஏற்பட்டுள்ள சேதங்களைப் பற்றி மதிப்பீடு செய்ய அரசாங்க அதிபர் அரசாங்க அதிகாரிகளுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

வடபகுதியில் ஏற்பட்டுள்ள சேதங்களை நேரில் பார்வையிட்டு மதிப்பீடு விபரங்களைத் தரும்படி ஒவ்வொரு காரியாதிகாரிகள் பகுதிக்கும் அரசாங்க அதிபரால் அதிகாரிகள் கோஷ்டி நேற்று அனுப்பப்பட்டது.

இந்த அதிகாரிகள் கோஷ்டியினர் ஒவ்வொரு கிராமசேவையாளர் பிரிவுகளும் கிராமசேவையாளர்களுடன் சேதமடைந்த பகுதிகளுக்கு விஜயம் செய்து சேதங்களை மதிப்பீடு செய்தபின்னரே நிவாரண உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உத்தியோகமொழி அமுல்

# கார்ப்பரேஷன்களுக்கென புதிய வழிவகைகள்

## மந்திரிகள் உபகமிட்டி ஆராயும்

கொழும்பு, வியாழன்

அரசாங்கத்தின் உத்தியோக மொழிக் கொள்கையை அரசாங்க கார்ப்பரேஷன்களில் அமுல் நடத்துவதில் புதிய முறையொன்றை உத்தியோகமொழி சம்பந்தமான மந்திரிகள் உபகுழு தனது அடுத்த கூட்டத்தில் ஆலோசிக்கவிருக்கிறது.

தற்போதுள்ள அரசாங்க மொழி அமுல் விதிகள் கார்ப்பரேஷன்களுக்கும் செல்லுபடியாகுமாயினும், சிலவற்றை நடைமுறையில் செய்ய முடியாமலிருப்பதால் அரசாங்க கார்ட்பரேஷன்களுக்கென புதிய அமுல் விதிகளை இந்த உபகுழு ஆலோசிக்கும்.

உள்நாட்டு இறைமதிப்பு இலாகாவில் உள்ள உதவி இறைமதிப்பாளர்களுக்கு சில சலுகைகள் கொடுப்பது பற்றியும், புதிய ஆசிரியர்களுக்கு வழங்கப்படவிருக்கும் சலுகைகள், மத்திய எழுதுவினைஞர் பரீட்சையில் இனிமேல் எவ்வித கொள்கையை கடைப்பிடிப்பது என்பது குறித்தும் இலங்கைப் பிரஜைகளல்லாத பொது சேவையிலுள்ள புதிய உத்தியோகத்தர்களுக்கு உத்தியோக மொழி விஷயம் குறித்தும் உப கமிட்டி ஆலோசிக்கும்.

# நிவாரண உதவிகள் துரிதமாக வழங்கப்படும்

## கரைச்சி தூதுகோஷ்டிக்கு அரசாங்க அதிபர் உறுதி

யாழ்ப்பாணம், வெள்ளி

கரைச்சி கிராமமுன்னேற்ற சங்கங்களின் சமாஜ தூதுகோஷ்டி நேற்று யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரைச் சந்தித்து அப்பகுதியில் செய்ய வேண்டிய நிவாரண வேலைகளைப்பற்றிய ஒரு முறைப்பாட்டைச் சமர்ப்பித்தது. இது குறித்து சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என அரசாங்க அதிபர் திரு. ஜெயவீரா [illegible] வாக்களித்துள்ளார்.

பிரதானமாக குடியேற்றப் பகுதி மக்களிடம் குறைந்தது 2 வருடத்[illegible] நிலவரி, நீர்வரி அறவிடப்படக்கூடாது என்று அரசாங்கத்துக்கு சிபார்சு செய்ய தாம் தீர்மானித்திருப்பதாகவும் அவர் கூறினர். கரைச்சிப்பகுதி குடியேற்ற வாசிகளுக்கு அறுவடை காலம்வரையும் பொறுத்திருந்து இவர்களின் பயிர் அழிவுக்குரிய நிவாரண உதவியை தாமதிக்காது செய்யவேண்டும் என தூதுகோஷ்டி வற்புறுத்திய போது செய்ப்பயிரிலேயே தங்கள் சீவியத்தை நடத்தும் குடியேற்றவாசிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருப்பின் தனித்தனியாக விண்ணப்பம்செய்து காரியாதிகாரியிடம் நிவாரண உதவி பெறலாம் என்று அரசாங்க அதிபர் தெரிவித்தார்.

இத் தூதுகோஷ்டியில் கரைச்சி கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு த. நல்லதம்பி, திருவாளர்கள் சி. க. வேலாயுதபிள்ளை, கே. தம்பிராசா, பே. பாலசுந்தரம், சி. சிவக்கொழுந்து ஆகியோர் இருந்தனர். குறித்த தூதுகோஷ்டியினருக்கு உதவியாக அகில இலங்கை காந்தி சேவாசங்கத் தலைவர் திரு. கு. கேசையாவும் சமூகமளித்து அரசாங்க அதிபருடன் பேச்சுக்கள் நடத்தினர்.

அழிவு ஏற்பட்டவர்களுக்கு வழங்கும் நிவாரணம் என்ன என்பதைத் தீர்மானித்து உடனுக்குடன் நிவாரணம் வழங்கத்தக்க அளவுக்கு காரியாதிகாரிக்கு உத்தரவிட்டிருப்பதாக அரசாங்க அதிபர் மேலும் கூறினர்.

# 'ஈரவெங்காயத்தை இறக்குமதி செய்யவேண்டாம்

## போதியளவு வெங்காயம் தீவுப்பகுதிகளில் உண்டு'

### அரசாங்கத்துக்கு கோரிக்கை

யாழ்ப்பாணம், வெள்ளி

ஊர்காவற்றுறை தீவுப்பகுதிகளில் ஏராளமான அளவு ஈரவெங்காயம் அறுவடைசெய்யப்பட்டிருப்பதால் நாட்டில் வெங்காயத் தட்டுப்பாட்டை நீக்க இந்தியாவிலிருந்து இலங்கைக்கு ஈரவெங்காயம் இறக்குமதிசெய்யும் யோசனையைக் கைவிடவேண்டுமென்று கோரி பிரதமருக்கும் யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும் ஊர்காவற்றுறை தீவுப்பகுதிமக்கள் சார்பில் தந்திகள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கின்றன.

ஊர்காவற்றுறை தீவுப்பகுதி மக்கள் சார்பில் திரு எம். குமாரசாமிப்பிள்ளை அனுப்பி வைத்துள்ள தந்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

"யாழ்ப்பாணப் பகுதியில் வீசிய சூறாவளியினால் ஈரவெங்காயத்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதென்றும் இதனைப் போக்க இந்தியாவிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்ய அரசாங்கம் யோசித்துவருவதாகவும் நேற்று வெளியான பத்திரிகை செய்தியொன்று கூறுகிறது. கடந்த செப்டம்பர் மாதத்தில் ஊர்காவற்றுறை தீவுப்பகுதிகளில் ஏராளமான அளவில் வெங்காயம் அறுவடை செய்யப்பட்டிருக்கிறது. 10,000 அந்தர் ஈரவெங்காயத்தை அரசாங்கத்தின் விலைக்கேற்ப உடனடியாக விநியோகம்செய்யமுடியும். கையிருப்பிலுள்ள வெங்காயம் உடனடியாக விநியோகிக்கப்படாவிட்டால் ஒரு சிலவாரங்களுக்குள் அவை வேர்விட்டுவிடும். இதனால் லட்சக்கணக்கான ரூபாய் கஷ்டமும் ஏற்படும்.

கையிருப்பிலுள்ள வெங்காயத்தை விநியோகம் செய்ய அரசாங்கம் ஆனையிறவுத்தடையை நீக்கவேண்டும். அல்லது கூட்டுறவுச் சங்கங்களில் இவற்றை விற்பனைசெய்ய அதிகாரம் வழங்கப்படவேண்டும். இதுபற்றி விரைவாக நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கின்றோம்."

தந்தியின் பிரதிகள் ஊர்காவற்றுறை காங்கேசன்துறை முன்னாள் எம். பி. க்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

## சுதந்திரக்கட்சி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ணேடோ, அக்குறணை - டி. ஈ. ஏச். திறிசேன, கலஹெர - திருமதி இலங்கரத்ன, யட்டிநுவர - யூ. பி. வீரசேகரா, உடுநுவர - சி. பி. ஜெயசூரியா, கண்டி - ஜி. பி. டி. ஈ. சில்வா, செங்கடகல - பியசேன தென்னக்கோன், குண்டசாலை - யூ. பி. வை. ஜினதாஸா, தெலதெனியா - ஆர். ஆர். ஆர். குலத்திலக, மினிபே - ஏச். என். நவரத்தினி, ஹங்குறன்கெத்த - பி. பி. யுனன்டெனி, கம்பளை - ஆர். ஆர். டி. பண்டாரநாயக்கா, கொத்மலை - ஜே. டி. வீரசேகரா, நுவரேலியா - வில்லியம் பெர்னாண்டோ, மஸ்கெலியா - டபிள்யூ. ஆரியதிலகா, அம்பலாங்கொடை - பி. டி. எஸ். குலரத்ன, பென்தர எல்பிட்டிய - அல்பேட் காரியவசம், ஹினிதும - ஹெந்தி திஸநாயக்க, அக்மீமன - சேனபால சமரசேகரா, காலி - டபிள்யூ. சி. விஜயகுலசூரியா, வெலிகமபாணி இலங்ககோன், ஹம்பன - ரோய்ராஜபக்ஷ, இன்நுவர - வில்லியம் டி சில்வா, பெலியத்தை - டி. ஏ. ராஜபக்ஷ, முல்கிரிய - ஜோர்ஜ் ராஜபக்ஷ, திஸமகாறம - சார்ள்ஸ் எதிரிசூரிய, மூதூர் - ஏ. எல். ஏ. மஜீத், மட்டக்களப்பு - ஏ. ஏ. ஏ. றகுமான், புத்தளம் - எஸ். பி. அபுத்தாஹிர், யாப்பாகுவா - ஆர். பி. தென்னக்கோன், கிரியால - ஏ. எம். ஜி. குணத்திலகா, வாரியப்பொல - எம். ஏ. ஜே. விஜயசிங்கா, பிங்கிரியா எல். பி. ஜெயசேன, சிலாபம் - எஸ். டி. ஆர். ஜெயரத்ன, நாத்தாண்டியா - புஞ்சிடஸ் திசேரா, பொல்காவலை - ஸ்டீபன் சமரக்கொடி, மாவத்துகம - டி. பி. விக்கிரமசிங்கா, டொடன்கொஸ்லந்த - ஆர். டபிள்யூ. ராஜபக்ஷா, இபுகம - கே. பி. ரத்நாயக்கா, மிஹிந்தலை - பி. எம். கே. தென்னக்கோன், கலேவல - ஆர். பி. ரத்னமாலாவ, கெக்கிராவ - எச். பண்டா, மின்னேரியா - வில்லியம் பண்டார, மஹியங்கனை - எம். எஸ். ரத்நாயக்கா, பசறை - அமரானந்த ரத்நாயக்கா, பதுளை - பீ. எச். பி. பண்டார, சோறன்தோட்ட கே. வை. எம். விஜயரத்ன, ஊவா பறணகமுவ - பி. டெலுங்காவத்தை, பண்டாரவளை - ஜே. ஜி. குணசேகரா, மொனறாகலை - ஏ. வெலிகம, டெடிகம - ரத்தினே தேசப்பிரிய சேனநாயக்கா, கல்கமுவா - பி. பி. பாலசூரியா, றம்புக்கனை - ஏ. முத்துநாயக்கா, இரத்தினபுரி - ஜெயவர்த்தன, பெல்மதுளை - டபிள்யூ. ஏ. கருணசேன, வத்தளை - டாக்டர் டி. ஜே. வியேரா.

## இரு மாறுதல்கள்

முன்னாள் தெஹியோவிற்ற லங்கா சமசமாஜக்கட்சி அங்கத்தவர் திருமதி சோமா விக்கிரமநாயக்கா அவிசாவளைத் தொகுதியில் சுதந்திரக்கட்சி அபேட்சகராகத் திரு. பிலிப் குணவர்த்தனவுக்கு எதிராகப் போட்டியிடவிருப்பதும், மக்கள் ஐக்கிய முன்னணிக் கட்சியிலிருந்து விலகிய முன்னாள் மந்திரி திரு. வில்லியம் டீ' சில்வா தெவிநுவரைத் தொகுதியில் சுதந்திரக்கட்சி அபேட்சகராகப் போட்டியிட விருப்பதும் குறிப்பிடத்தக்க இரு அம்சங்களாகும்.

## போட்டியிடாது

கொழும்பு, புதன்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் எந்தத் தொகுதியிலும் போட்டியிடுவதில்லை என இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

# கொடிகள்கட்டவும் வாகனங்கள் உபயோகிக்கவும் தடை

## புதிய தேர்தல் திருத்தசட்டங்களில் சில

கொழும்பு, வியாழன்

கேற்று தேர்தல் கமிஷனரால் வெளியிடப்பட்ட தேர்தல் திருத்த விதிகளில் சிலவற்றை கீழே தருகிறோம். பின்வருபவை குற்றத்துக்குரிய செயல்களாகும்:-

- ஒரு அபேட்சகருக்காக வாக்கு ஆதரவு கேட்டல், வாக்குப் போடவேண்டாம் எனத் தடுத்தலும், இன்னொரு அபேட்சகருக்கு வாக்களிக்கவேண்டாமெனத் தடுத்தலும்.
- தேர்தல் தினத்தன்று, வாக்களிப்பு நிலையத்துக்கு பக்கத்தில் ஒரு குறிப்பிட்ட அபேட்சகருக்கு போட்டியிடுமாறு ஒலிபெருக்கி மூலம் கேட்டுக்கொள்வது அல்லது சத்தமிடுவது.
- தேர்தல் தினத்தன்று அந்தந்த தேர்தல் தொகுதியிலுள்ள ஒரு அபேட்சகர் தனது வீட்டைத் தவிர்ந்த எந்த ஒரு கட்டடத்திலாவது தனக்கு ஆதரவுதேடும் நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது.
- நியமனப் பத்திரம் தாக்கல் செய்த நாள் தொடக்கம் தேர்தல் தினத்துக்கு அடுத்த நாள்வரை மேதினம், சமய, சமூக ஊர்வலங்கள் தவிர்ந்த ஏனைய ஊர்வலங்களில் கலந்து கொள்ளக்கூடாது.
- அபேட்சகர் அல்லது அவரது ஏஜென்ட் பாவிக்கும் வாகனங்கள் தவிர்ந்த ஏனைய வாகனங்களிலும் பொது இடங்களிலோ தனிப்பட்ட இடங்களிலே கொடிகளோ, தேர்தல் பிரசார அட்டைகளோ தொங்கவிடப்படக் கூடாது.
- பொது இடங்களில் துண்டுப பிரசுரங்களேனும், சுவரொட்டிகளேனும் ஒட்டக் கூடாது. கூட்டம் நடைபெறும் இடத்தில் மட்டும் ஒட்டலாம்.
- தெருக்களில் கொடிகள், தேர்தல் அட்டைகள், துண்டு பிரசுரங்கள், சுவரொட்டிகள் எதுவும் தொங்கவிடக் கூடாது.
- சமய கட்டடங்களில் தேர்தல் சம்பந்தமான துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கக் கூடாது.
- ஆலயத்தில் கூட்டம் நடத்தலோ அல்லது அதற்கு காரணமாக இருத்தலோ குற்றத்துக்குரியது.
- ஊழியர் ஒருவர் வாக்குப் பதிவு செய்யவிரும்புவதாக முதலாளிக்கு அறிவித்தால், சம்பளத்தில் எதுவித குறைவுமில்லாமல் 4 மணித்தியாலத்துக்கு குறையாமல் லீவு கொடுக்க வேண்டும்.
- எவராயினும், இன்னொருவரது வாகனத்தை வாடகைக்கேனும், நட்பு முறையிலேனும் பாவித்து வாக்களிப்பு நிலையத்துக்கு செல்லக் கூடாது.

## 'பிரேரணை கொண்டுவருக'

மாவிட்டபுரம், வியாழன்

தெல்லிப்பழையில் அண்மையில் மனித உரிமைகள் பற்றி நடைபெற்ற கருத்தரங்கைத் தொடர்ந்து தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தெல்லிப்பழை கிராமசபையிலுள்ள தமிழரசு ஆதரவான அங்கத்தவர்களை கிராமசபையின் கூட்டத்தில் பொது ஸ்தாபனங்களை சிறுபான்மை மக்களுக்கு திறந்துவிடும்படி கடைச் சொந்தக்காரர்களைக் கேட்டுக்கொள்ளும் பிரேரணையொன்றைக் கொண்டுவரும்படி கேட்டுள்ளார்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## நகைச்சுவை விழா

நல்லூர், வெள்ளி

யாழ்ப்பாணம் இளம் நடிகர் சங்கத்தின் ஆதரவில் நாளை சனிக்கிழமை நகைச்சுவை விழாவொன்று நடத்தப்படவிருக்கின்றது. நல்லூர் மங்கையற்கரசி வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறும் இவ் விழாவிற்கு திரு. சி. சரவணபவன் தலைமைவகிக்கிறார், களக்காடு தவில்மேதை குழுக்கா கணபதி குழுவினரின் நாதசுர இன்னிசையுடன் ஆரம்பிக்கும் விழாவை யாழ். நகர முதல்வர் எஸ. சி. மகாதேவா தொடக்கிவைப்பார். திரு. தேவனின் வரவேற்புரையைத் தொடர்ந்து திருவாளர்கள் ஆ. துரைராஜசிங்கம், டாக்டர் செ. சிவஞானசுந்தரம் ஆகியோரின் சொற்பொழிவுகள், திரு. வி. கே. ஆறுமுகம். திரு. எஸ. வி. வேல் கோஷ்டியினரின் வில்லுப்பாட்டு, மாஸடர் ஏ. சிவலிங்கத்தின் நகைச்சுவைக் கதம்பம், திரு. பாலசுப்பிரமணியத்தின் நகைச்சுவைக் கதாப்பிரசங்கம், திரு. பி. தியாகராஜாவின் நூதனக் கதம்ப இசை, இளம் நடிகர் சங்கத்தின் நகைச்சுவை நாடகம் என்பனவும் நகைச்சுவைக் கவியரங்கும் விழாவில் இடம்பெறுகின்றன.

## சுந்தரர்கட்டுப்பணம்

வவுனியா, புதன்

வவுனியாத் தொகுதிக்கு திரு. சி. சுந்தரலிங்கம் தனது கட்டுப்பணமாகிய 1000 ரூபாவையும் இன்று கட்டினார். இவர் சுயேச்சையாகவே கட்டுப் பணம் கட்டியுள்ளார்.

நல்லூர், வெள்ளி

மட்டக்களப்பு முன்னாள் எம். பி. திரு. செ. இராசதுரை நாளைக் காலை யாழ்ப்பாணம் வருகிறார். யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் இவர் கலந்துகொள்வார்.

## பிரதமருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் கோட்டை மைதானத்தில் தங்கள் தேர்தல் பிரசாரக்கூட்டம் ஒன்று நடத்துவதற்கு இங்குள்ள பாதுகாப்பு அதிகாரி அனுமதி அளிக்க மறுத்ததைத் தொடர்ந்து மக்கள் மறுமலர்ச்சி இயக்கத்தினர், அதில் தலையிட்டுக் கூட்டம் நடத்த அனுமதிக்க உத்தரவிடுமாறு கோரி பிரதமருக்கும், மகாதேசாதிபதிக்கும் தந்தியொன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

## நிவாரண வேலைகள் பற்றிய மகாநாடு

யாழ்ப்பாணம், வெள்ளி

சூறாவளி நிவாரணவேலைகள் சம்பந்தமாக ஆராயும்பொருட்டு நாளை சனிக்கிழமை காலை யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் மகாநாட்டு அறையில் ஒரு மகாநாடு நடைபெறும். தொண்டர் ஸ்தாபனங்கள் கலந்துகொள்ளும் இந்த மகாநாட்டை அரசாங்க அதிபர் கூட்டியுள்ளார்.

புதுடில்லி, ஜன. 7

ஜாம்ஷெட்ஜி நஸர்வான்ஜி டாடாவின் ஞாபகார்த்தமாக 15 நயாபைசா விசேஷ முத்திரை ஒன்று இன்று வெளியிடப்பட்டது. இந்தியாவின் கைத்தொழில் அபிவிருத்திக்கு பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்திலேயே அவர் மகத்தான சேவை செய்தவராகும்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் 8-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org